நாள் : **01.06.2023**

**அ.வ.எண். 9/2015**

**பி.சா.1 - வரதராஜன்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு எந்தெந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சாமளாபுரம் கனரா வங்கியில் சேமிப்பு கணக்கு ஒன்றும் சோமனூரில் சிட்டி யூனியன் வங்கியில் சேமிப்பு கணக்கு ஒன்றும் உள்ளது. மேற்கண்ட இரண்டு வங்கி கணக்குகளும் என்னுடைய 2 வது மனைவியுடன் கூட்டுக்கணக்காக உள்ளது. மேற்கண்ட 2 வங்கி கணக்குகளிலும் என்னுடைய வருமான வரி கணக்கு எண்ணை இணைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட 2 வங்கி கணக்கு அறிக்கை மற்றும் பான் கார்டு ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான்.

2. வழக்கின் வாதி ஜானகி மற்றும் அவரது இரு குழந்தைகளும் என் மீது பாகப்பிரிவினை கேட்டு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.117/1997 வழக்கினை தொடர்ந்தார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் தாவா சொத்து மூன்றாக பிரித்து என்னுடைய குழந்தைகளுக்கு 2 பங்கு கொடுக்க தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு தெரியும். அந்த வழக்கில் என்ன தீர்ப்பாகியுள்ளது என்று தெரியாது. அ.வ.எண்.117/1997 ல் கோயமுத்தூரைச் சேர்ந்த திரு.அருணாச்சலம் என்ற வழக்கறிஞரை நியமித்திருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய தொழில் என்ன என்றால் விவசாயம் செய்வேன். விறகு வாங்கி விற்பேன்.

3. அசல் வழக்கு எண்.117/1997-ல் உள்ள சொத்தும் இந்த அசல் வழக்கில் உள்ள சொத்தும் தென்னை தோப்பு உள்ளது என்றால் 3 ஏக்கர் மட்டும் தென்னை தோப்பாக உள்ளது. தென்னை மரங்களின் வயது என்ன இருக்கும் என்றால் 16 வயது இருக்கும்.

தென்னை மரம் காய்ப்பில் உள்ளது என்றால் இல்லை. எல்லா தென்னை மரங்களும் காய்ப்பில் உள்ளது என்றும் நான் வழக்கிற்காக காய்ப்பில் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்துக்கு உண்டான அடங்கல் ஆவணங்களை இந்த அசல் வழக்கில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல. நான் அடங்கலை தாக்கல் செய்தால் தென்னை மரங்கள் அனைத்தும் காய்ப்பில் உள்ளது தெரிந்து விடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்./- எஸ்.வடிவேல்,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

பல்லடம்.

ஒப்பம்./- வரதராஜன்